# யூன் – 11 – செவ்வாய்

## புனித பர்ணபாஸ்

“ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்” திபா 98 : 2

---

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 11:2 –26,13:1- 3

அந்நாட்களில் பெருந்தொகையான மக்கள் நம்பிக்கை கொண்டு ஆண்டவரிடம் திரும்பினர்.இந்தச் செய்தி எருசலேம் திருச்சபையினரின் காதில் விழவே அவர்கள் பர்னபாவை அந்தியோக்கியா வரை சென்று வர அனுப்பிவைத்தார்கள்.அவர் அங்குச் சென்றபோது, கடவுளின் அருள்செயலைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார் மேலும் உறுதியான உள்ளத்தோடு ஆண்டவரைச் சார்ந்திருக்குமாறு அனைவரையும் ஊக்கப்படுத்தினார்.அவர் நல்லவர் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு நம்பிக்கை நிறைந்தவராய் பெருந்திரளான மக்களை ஆண்டவரிடம் சேர்த்தார்.பின்பு சவுலைத் தேடி அவர் தர்சு நகர் சென்றார். அவரைக்கண்டு, அந்தியோக்கியாவுக்கு அழைத்து வந்தார். அவர்கள் ஒராண்டு முழுவதும் அந்தச் சபையாரோடு கூடவே இருந்து பெருந்திரளான மக்களுக்குக் கற்பித்து வந்தார்கள். அந்தியோக்கியாவில்தான் முதல் முறையாகச் சீடர்கள் கிறிஸ்தவர்கள் என்னும் பெயரைப் பெற்றார்கள்.அந்தியோக்கிய திருச்சபையில் பர்னபா, நீகர் எனப்படும் சிமியோன், சிரேன் ஊரானாகிய லூக்கியு, குறுநில மன்னன் ஏரோதுவுடன் வளர்ந்த மனாயீன், சவுல் ஆகியோர் இறைவாக்கினராகவும், போதகராகவும் இருந்தனர்.அவர்கள் நோன்பிருந்து ஆண்டவரை வழிபடும்போது தூய ஆவியார் அவர்களிடம், ”பர்னபாவையும் சவுலையும் ஒரு தனிப்பட்ட பணிக்கென நான் அழைத்திருக்கிறேன். அந்தப் பணிக்காக அவர்களை ஒதுக்கி வையுங்கள்” என்று கூறினார்.அவர்கள் நோன்பிலிருந்து இறைவனிடம் வேண்டினார்கள் தங்கள் கைகளை அவ்விருவர்மீது வைத்துத் திருப்பணியிலமர்த்தி அவர்களை அனுப்பி வைத்தார்கள்.

**பதில்பாடல் :** பிற இனத்தார் கண் முன்னே ஆண்டவர்
நீதியை வெளிப்படுத்தினார்.

## நற்செய்தி : மத்தேயு 5 : 13 – 16

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது : “நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள். உப்பு உவர்ப்பற்றுப் போனால் எதைக் கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்க முடியும்? அது வெளியில் கொட்டப்பட்டு மனிதரால் மிதிபடும் வேறு ஒன்றுக்கும் உதவாது.நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள். மலைமேல் இருக்கும் நகர் மறைவாயிருக்க முடியாது.எவரும் விளக்கை ஏற்றி மரக்காலுக்குள் வைப்பதில்லை மாறாக விளக்குத் தண்டின் மீதே வைப்பர். அப்பொழுதுதான் அது வீட்டிலுள்ள அனைவருக்கும் ஒளி தரும். இவ்வாறே உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள்“ என்றார்.

**தியானம்:** உப்பும் ஒளியும் தன்னுடைய குணத்தை செயல்படுத்துவதில் ஒன்றுக்கொன்று ஈடு இணையானது. உப்பு, உவர்ப்பு தன்மையும் ஒளி, ஒளிர்விக்கும் தன்மையும் கொண்டது. அதேபோல், கத்தோலிக்கர்களிடம் கிறிஸ்துவின் மதிப்பீடுகள், கிறிஸ்தவ நற்செயல்கள் வெளிப்படவில்லை யென்றால், அப்படிப்பட்ட வாழ்வினால் யாருக்கும் பயனில்லை. உப்பு, இருந்த இடத்தில் இருந்து கொண்டு, அது எவ்வளவு கடினமான இடமாக இருந்தாலும் தன்னைக் கசியவைத்துக் கரைத்து தன் உவர்ப்புத் தன்மையை உட்புகுத்திவிடும். அதுபோல ஒளியும் தன் ஒளிக்கதிரை ஊடகங்கள் வழியாக எப்படியாவது தன் தாக்கத்தை ஏற்படுத்திவிடும்.நான் உவர்ப்பாக இருக்கிறேன் நான் வெப்பமாக இருக்கிறேன் என்று விரக்தியோ வேதனையோ அடையக்கூடாது. உப்பைப்போல ஒளியைப்போல தன்நிலையில் திருப்தியடைய வேண்டும். பாகற்காய் கசப்பாக இருப்பதில்தான் அதன் பெருமை. மாம்பழம் இனிப்பாக இருப்பதுதான் அதற்குச் சிறப்பு. இருப்பதில் திருப்தியடைந்து, நம்மிடம் இருக்கும் நம் தன்மையை எல்லோருக்கும் வழங்க வேணடும். கத்தோலிக்கன் தனக்கென ஒரு தனித்தன்மை கொண்டு, உப்பாகவும் ஒளியாகவும் செயல்பட அழைக்கப்பட்டுள்ளான். கத்தோலிக்கன் தன் தனித்தன்மையைப் புகுத்தி எங்கும் எதிலும் கத்தோலிக்கத்தின் மாண்பினை மிளிரச் செய்வதற்குப் பதிலாக, தன் இயல்பை இழந்துவிட்டால் அவன் இகழ்ச்சியடைவான். நாம் கத்தோலிக்கர்கள் என்பதை நாம் சொல்லி அல்ல, நம்முடைய வாழ்வு மற்றவர்களுக்கு புரிய வைக்கவேண்டும். வெறும் சொற்கள் நமக்கு மீட்பைத்தந்து விடாது. நமது செயல்பாடுகள் நமது விசுவாசத்தை அறிக்கையிடுகிற ஒன்று. எனவே நாம் ஒவ்வொருவரும் வாழ்வு மூலம் கத்தோலிக்கர்கள் என்பதை அறிக்கையிடுவோம்